*செய்தி வெளியீடு எண் :29* *நாள்:-24.01.2020*

**தேனி மாவட்டம்**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர்திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது.**

*******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (24.01.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

மாவட்டத்தில் 2020ம் வருட ஜனவரி மாதம் வரையிலான சராசரியாக பெய்ய வேண்டிய மழையளவான 29.8 மி.மீ க்கு 0.07 மி.மீ மழை பெய்துள்ளது. இந்த வருட சராசரி 829.8 மி.மீ க்கு இதுவரை 0.07 பெய்துள்ளது. டிசம்பர் 2019 மாதம் முடிய சாகுபடி செய்யப்பட்ட பரப்பு ஓத்திசைவு செய்ததின் அடிப்படையில் நெல் 7872 எக்டர், பயறுவகைகள் 16799 எக்டர் மற்றும் சிறுதானியங்கள் 10687 எக்டர், எண்ணெய் வித்துக்கள் 2572 எக்டர், பருத்தி 2448 எக்டர், கரும்பு 2815 ஒட்டுமொத்தமாக வேளாண்பயிர்கள் 43193 எக்டர் ஓத்திசைவு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு நெல் விதைகள் 2.0 மெ.டன்னும், சிறுதானியமான கம்பு விதை 0.13 மெ.டன்னும், உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டைப் பயிர் போன்ற பயறு வகை விதைகள் 9.70 மெ.டன்னும், எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை விதைகள் 5.40 மெ.டன்னும் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா 2037 மெ.டன்னும், DAP 903 மெ.டன்னும், பொட்டாஷ் 677 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 4471 மெ.டன்னும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியின் விவசாயிகள் ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் (PM KISAN) தேனி மாவட்டத்தில் 43421 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். ஏற்கனவே இத்திட்டத்தில் பதிவு செய்தும் நிதிஉதவி கிடைக்காத விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குநர்களை அணுகி ஆதார் பிழை மற்றும் வங்கி கணக்கு எண் தொடர்பான பிழைகளை திருத்தம் செய்யவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. பிரதம மந்திரியின் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தில் (PM-KMY) இதுவரை 18 முதல் 40 வயதுள்ள 970 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். மேலும் PM-KISAN ஊக்கத்தொகை பெற்ற சிறு,குறு விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் இணைந்து பயனடைய வேண்டும்.

பிரதம மந்திரி நுண்ணீர்ப்பாசன திட்டத்தின் கீழ் (PMKSY) தேனி மாவட்டத்தில் சொட்டு நீர் பாசனத்திற்கு 5371 எக்டர் பரப்பில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*அனைத்து விவசாயிளும் தங்கள் வட்டாரத்திலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்ததை அணுகி சிறு / குறு விவசாயிகள் 100 சத மானியத்திலும், சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெற வேண்டும். மேலும் சொட்டு நீர் பாசனம் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு துணை நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் தரைநிலைத்தொட்டி, ஆழ்துளை கிணறு, பைப்லைன் போன்ற இனங்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அரசின் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.*

*இக்கூட்டத்தில் மேகமலை வன உயிரின காப்பாளர் போஸ்லின் சச்சின் துக்காரம், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ஆர்.விஷ்ணுராம்மேத்தி, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***